செ.வெ.எண் 282

தேதி: 20-05-2011

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 19.05.2011

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தாலுகா, தாய்முடி என்னும் இடத்தில் திரு. சக்திவேல் என்பவருடைய மூன்று வயது மகள் செல்வி ஜனனி 18.05.2011 அன்று சிறுத்தைப் புலியால் தாக்கப்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து மிகவும் துயருற்றேன்.

குழந்தையை இழந்து வாடும் திரு. சக்திவேல் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த குழந்தையின் குடும்பத்திற்கு வனத் துறை மூலம் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளதுடன், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மேலும் ஒரு லட்சம் ரூபாய் வழங்க ஆணையிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9